

Botanical Name : **Aristolochia tagala**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | மகா ஈஸ்வர மூலி |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Increasing Breast Milk, Indigestion<br>தாய்ப்பால் அதிகரிக்க, அஜீரண கோளாறுகள் |
| Propagation Planting Material by | : | Seeds |
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Only in the Hill Station above 1200 mts of Tamil Nadu |

**மகா ஈஸ்வர மூலி :** இதன் வேரை மாட்டு நோய்களுக்கு தருவதுண்டு. இதன் இலை சொறி–சிரங்கு, தேமல் போக்கும்.



Botanical Name : ***Asparagus racemosus***

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb / Climber -** Naturally in Foothills in Tamilnadu |
| தமிழ் பெயர் | : | சதாவேரி |
| Hindi Name | : | Satavar |
| Part Used | : | Tuber Roots |
| Uses | : | Gynaecological Disorders, White Discharge<br>கருப்பை சம்பந்தமான நோய்கள், கர்ப்ப கோளாறுகளை சரிசெய்யும் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 1 Year Yield / Perennial Source |
| Grown Area | : | Major Source in Forest Area - Wild Source<br>Some Part of Garden in the Border Crop. |

**சதாவேரி :** இலையை வேகவைத்து நெய் தடவி சிறு கொப்புளங்களுக்கு வைத்து கட்டலாம். இலைச்சாறுடன் பால் சேர்த்து கொடுத்து வர வெப்பத்தை குறைத்து வெள்ளையை நிறுத்தும். கிழங்கை பாலில் வேக வைத்து, அப்பாலை உட்கொள்ள அழலால் உண்டான சுவையின்மை, செரியாக் கழிச்சல் தீரும்.



Botanical Name : **Asteragantha longifolia**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | நீர்முள்ளி |
| Hindi Name | : | Kokilaskha |
| Part Used | : | Whole Plant, Seeds |
| Uses | : | Rheumatism, Stones in the Bladder, Swellings<br>மூட்டுவலி, சிறுநீர் பெருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common in all over the districts of Tamil Nadu - Wild Source |

**நீர்முள்ளி :**இதன் விதை உடல் வன்மையை தரும். மேகம், மூலம், உடற்காங்கை, நீர் எரிச்சல் இவை நீங்கும். விதையை பாலில் ஊறவைத்து சர்க்கரை கலந்து கொடுக்க ஆண்மை பெருகும்.



Botanical Name : **Azadirachta indica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | வேம்பு |
| Hindi Name | : | Neem |
| Part Used | : | Leaf, Flower, Fruit, Seed, Oil, etc. |
| Uses | : | Anthelmintic, Antiseptic, Insecticide<br>புழுக்கொல்லி, அழுகலற்றி, பூச்சிக்கொல்லி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**வேம்பு :** பித்தப்பையில் நிறைந்த பித்த நீரை வெளியாக்கி காமாலை நோயைப் போக்கும். வேப்பிலையில் சிறிது மஞ்சள் சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்து மேலுக்கு போட கரப்பான், சொறி-சிரங்கு, அம்மை புண் இவை நீங்கும். இதன் பூவை ஊறல் குடிநீரிட்டுக் கொடுக்க குன்ம நோயை கண்டிக்கும். காயை உலர்த்தி கொட்டையை நீக்கி பொடித்து (2-8 கி) கொடுக்க முறைக் காய்ச்சல் நீங்கும். இதன் விதையை அரைத்து புழுப்பட்ட புண்களுக்குப் பூச புண்ணின்றும் புழுக்கள் வெளிப்படும், புண் ஆறும் வேப்பிலையை குளிக்கும் நீரில் போட்டு குளிக்க சரும பிணிகள் வராது. வேப்பம்பூவை குழம்பாக செய்து உண்ண வயிற்றுப் புழு குறையும்.



Botanical Name : **Bacopa monnieri**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | நீர்பிரம்மி |
| Hindi Name | : | Brahmi |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Nervine Tonic<br>நரம்புரமாக்கி |

Propagation Planting Material by : Stem Cutting

| | | |
|---|---|---|
| Espacement | : | 15 CM X 15 CM |
| Duration of Crop | : | 4 Months Yield / Perennial Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Water Resource Area<br>Cultivated in Kancheepuram, Salem |

**நீர் பிரம்மி :** இலையை வெண்ணெயில் பொரித்து தொண்டை கம்மல் தீர சாப்பிடலாம். இதன் பூண்டை அரைத்து கொதிக்க வைத்து நெஞ்சில் பூச கோழைக்கட்டு நீங்கும். இலைச்சாறும் மண்ணெண்ணையும் சேர்த்து கீல் வாயுகளுக்கு பூசலாம். இலையை சிற்றாமணக்கு விட்டு வதக்கி, வீக்கங்களுக்கு வைத்து கட்டலாம்.




Botanical Name : **Boerhaavia diffusa**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | மூக்கிரட்டை |
| Hindi Name | : | Thikhri |
| Part Used | : | Plant, Root |
| Uses | : | Diuretic, Laxative, Anthelmintic<br>சிறுநீர் பெருக்கி, மல மிளக்கி, புழுக்கொல்லி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 CM X 30 CM |
| Duration of Crop | : | 6 Months Yield |
| Grown Area | : | Distribution is common all over the district of Tamil Nadu - Wild Source |

**மூக்கிரட்டை :** இதனை புசித்து வந்தால் வளி நோய்கள் தலை காட்டாது. இதன் இலை மலச்சிக்கலை நீக்கும். இதன் வேர் கீல் வாதம், இரைப்பு போகும். கீரையாக புசிக்கலாம். சிறுநீரக நோய்களுக்கு சிறந்தது.



Botanical Name : **Butea monosperma**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | பலாசு |
| Part Used | : | Fruits, Seeds |
| Uses | : | Flatulent, Colic, deworming<br>வயிற்றுப் பொருமல்,<br>அஜீரண கோளாறுகள், வயிற்றுப் புழு |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | All Forest Area in Tamil Nadu |

**பலாசு :** இதன் பிசின் கீல்கள், நரம்புகள், மார்பு ஆகியவைக்கு பலம் கொடுக்கும், ஆண்மை, அறிவு பெருக்கும், தொண்டைகளில் பூச தொண்டைப்புண் மாறும். இதன் இலையை அரைத்து பூச கட்டிகள் கரையும், புற்றுகளின் வளர்ச்சியை தடுக்கும். விதையை அரைத்து படை முதலிய நோய்களுக்கு பூசலாம். இதன் பட்டை பாம்பு கடி நஞ்சை போக்கும்.



Botanical Name : **Caesalpinia crista**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | கழற்ச்சிக்காய் |
| Hindi Name | : | Kantakareja |
| Part Used | : | Seeds |
| Uses | : | Orchitis<br>விரை வீக்கம் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**கழற்சி :** இதன் இலை பலவித குன்மம் போக்கும். விதையை வெண்கரு விட்டு அரைத்து பற்றிட விரை வீக்கம் நீங்கும். தேங்காய்ப்பூ சேர்த்து விளக்கெண்ணெய் விட்டு வதக்கி வீக்கங்களுக்கு வைத்துக் கட்டலாம்.



Botanical Name : **Caesalpinia sappan**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | பதிமுகம் |
| Hindi Name | : | Patang |
| Part Used | : | Wood |
| Uses | : | Carminative<br>அகட்டுவாய்வகற்றி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Grown in Public Park & Forest Nursery in Tamil Nadu |

**பதிமுகம் :** இதன் மரப்பட்டையை குடிநீர் செய்து பருக வயிற்றுப்போக்கு, சீதபேதி, பூஞ்சை நோய்கள் குணமாகும். இதன் பட்டையை சூரணம் செய்து கொள்ள சுரம், பித்த மயக்கம் தீரும்.



Botanical Name : **Caltropis gigantia**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | எருக்கு |
| Hindi Name | : | Madar |
| Part Used | : | Leaves, Flowers |
| Uses | : | Skin Diseases, Rheumatism<br>தோல் நோய்கள், வாத நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**எருக்கு :** இதன் இலையைப் பிழிந்து சாறு எடுத்து 2-5 துளி அருந்த தேள், பாம்பு விஷக்கடிகள் நீங்கும். இலையை உலர்த்தி பொடி செய்து ஆறாத புண்களுக்குப் போட சீக்கிரத்தில் புண்கள் உலரும். இதன் பூ 1 (அ) 2 பங்கு, மிளகு 1 பங்கு, கிராம்பு 1/2 பங்கு சேர்த்து அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து கொடுக்க கடின இரைப்பு உடனே தணியும்.



Botanical Name : **Calotropis procera**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrubs** |
| தமிழ் பெயர் | : | வெள்ளெருக்கு |
| Hindi Name | : | Madar (Safed) |
| Part Used | : | Leaves, Flowers |
| Uses | : | Lung Disorders<br>நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Wild Source |
| Duration of Crop | : | Perennial Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**வெள்ளெருக்கு :** இதன் வேர்பட்டையை பொடி செய்து நாள் ஒன்றுக்கு 2-3 முறை 2-3 குன்றி அளவு அருந்த சீதக்கழிச்சல், வயிற்றுப் பிடுங்கல் குணமாகும். இதன் வேர்ப்பட்டையை குடிநீர் செய்து கொடுக்க வியர்வை தோன்றி சுரம் தணியும்



Botanical Name : **Cardiospermum calicacabum**

| | | |
|---|---|---|
| Habit | : | **Climber** |
| தமிழ் பெயர் | : | முடக்கத்தான் |
| Hindi Name | : | Kanphata |
| Part Used | : | Whole Plant, Seeds |
| Uses | : | Rheumatism, Nervous Diseases<br>வாத நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | Natural Source |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | Distribution is common all over the districs of Tamil Nadu - Wild Source |

**முடக்கத்தான் :** இதன் இலையைக் கீரையாக சமைத்து உண்ண மூட்டுவாதம், முடக்குவாதம் குணமாகும். இதன் இலையைச் சாறு எடுத்து 2-3 துளி காதில் விட காது வலி குணமாகும். இதன் இலையை வதக்கி அடிவயிற்றில் கட்ட சூதகத்தை மிகுதிப்படுத்தி சூலக அழுக்குகளை வெளிப்படுத்தும். இலை, வேர் முதலியவைகளக் குடிநீரிட்டு, வெளிமூலம், நாட்பட்ட இருமல் முதலியவைகளுக்கு கொடுக்கலாம். அடையாகவும், துவையலாகவும் செய்து உண்ணலாம்.



Botanical Name : **Cassia elata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | சீமை அகத்தி |
| Hindi Name | : | Dadmurdan, Dadmari |
| Part Used | : | Leaves, Bark |
| Uses | : | Leprosy and Skin Diseases<br>தோல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Mts. X 1 Mts. |
| Duration of Crop | : | Wild Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**சீமை அகத்தி :** இதன் இலை மற்றும் பூவை குடிநீர் செய்து கொடுக்க ஆஸ்துமா கட்டுப்படும். இதன் இலையை அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து பூச படர்தாமரை குணமாகும்.



Botanical Name : **Cassia auriculata**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | ஆவாரை |
| Hindi Name | : | Tarwar |
| Part Used | : | Flower Buds, Flowers |
| Uses | : | Diabetes<br>நீரிழிவு நோய் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Mtr. X 1 Mtr. |
| Duration of Crop | : | Wild Source |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**ஆவாரை :** இதன் பூவை சமைத்து சாப்பிட கற்றாழை மணம், நீரழிவு, நீர் வேட்கை சமனப்படும். இதன் பூவுடன் பச்சைப்பயிறு சேர்த்தரைத்து உடம்பில் தேய்த்துக் குளிக்க நமைச்சல் குணமாகும். இதன் பூவை குடிநீரிட்டு பால் சேர்த்து சாப்பிட உட்சூடு தணியும். இதன் முழுச்செடியும் குடிநீரிட்டு எடுத்துக் கொள்ள நீரழிவு, ஆண்குறி எரிச்சல் தணியும்.



Botanical Name : **Cassia fistula**

| | | |
|---|---|---|
| Habit | : | **Trees** |
| தமிழ் பெயர் | : | சரக்கொன்றை |
| Hindi Name | : | Amaltas |
| Part Used | : | Root Bark, Root, Pulp, Leaves and Flowers |
| Uses | : | Common Skin Infections due to Fungi and Bacteria<br>தோல் நோய்கள், வீக்கமுருக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 6 Mts. X 6 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**சரக்கொன்றை :** இதன் புளியை அரைத்து குழந்தைகளின் உந்தியைச் சுற்றிப் பற்றிட வயிற்றுப் பொருமல் நீங்கி வயிறு கழியும். இதன் பூவைப் பழச்சாறு விட்டு அரைத்து உடம்பில் தேய்த்துக் குளிக்க தேமல், சொறி, கரப்பான் இவை தீரும். இதன் இலை கொழுந்தை அவித்து பிழிந்த சாற்றில் சர்க்கரைக் கூட்டி 150 மி.லி. உட்கொள்ள கிருமி, திமிர்பூச்சி இலைகள் மலத்துடன் வெளிப்படும்.



Botanical Name : **Cassia occidentalis**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | பொன்னாவரை |
| Hindi Name | : | Kasondi |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Convulsions, Whooping Cough<br>வலிப்பு நோய்கள், நுரையீரல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 Mts. X 30 Mts. |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all over the district of Tamil Nadu - Wild Source |

**பொன்னாவாரை :** இதன் இலை, விதை சம அளவாக எடுத்து அரைத்து எலுமிச்சம் பழம் அளவு வெந்நீரில் கொடுக்க நன்கு பேதியாகி வயிற்றிலுள்ள நுண்புழுக்கள் வெளியேறும். இதன் இலை கீழாநெல்லி சம அளவு சேர்த்து அரைத்து நெல்லிக்காய் அளவு மோரில் கலந்துக் கொடுக்க மஞ்சள் காமாலை நோய் குணமாகும். இதன் வேர் 15 கி., சுக்கு, மிளகு, சீரகம், வகைக்கு 10 கி. எடுத்து 500 மி.லி. நீரிலிட்டு 200 மி.லி. வரும் வரை காய்ச்சி வடிகட்டி 100 மி.லி. அளவு 2 வேளை கொடுக்க பித்த பாண்டு குணமாகும்.



Botanical Name : **Cassia tora**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | ஊசித்தகரை |
| Hindi Name | : | Panevar |
| Part Used | : | Leaves, Seeds |
| Uses | : | Skin Diseases<br>தோல் நோய்கள் |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 30 CM X 30 CM |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all over the districts of Tamil Nadu - Wild Source |

**ஊசித்தகரை :** இலை (அ) வேரை பழ இரசம் விட்டரைத்து படர்தாமரை, சொறி–சிரங்குகளுக்கு பூச போகும். இலையை அரைத்து சிற்றாமணக்கெண்ணெயுடன் சேர்த்து காய்ச்சி வடிகட்டி புண்களுக்கு பூச போகும். இலையை கஷாயம் செய்து 1 முதல் 1 1/2 பாலாடை அளவு குழந்தைகளுக்கு கொடுக்க பல் முளைக்கும் தருவாயில் உண்டாகும் சுரம் நீங்கும்.



Botanical Name : **Celastrus paniculatus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Shrub** |
| தமிழ் பெயர் | : | வாலுளுவை |
| Hindi Name | : | Malkangani |
| Part Used | : | Leaves, Seeds, Oil, Bark |
| Uses | : | Aphrodisiac, Nervine Tonic<br>காமம் பெருக்கி, நாடியுரமாக்கி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 3 Mts. X 3 Mts. |
| Duration of Crop | : | Annual |
| Grown Area | : | Natural Source in Forest Area of above 500 mtr. height |

**வாலுளுவை :** விதையை பசுவின் நீர்விட்டரைத்து பக்குடனுள்ள புண்களுக்கு பூச தீரும். விதையை பொடி செய்து 1 ஸ்பூன் நாள் ஒன்றுக்கு 2-3 முறை கொடுக்க இருமல், பெரும்பாடு, வயிற்றுக் கடுப்பு தீரும்.



Botanical Name : **Centella asiatica**

New Name : **Hydrocotyl asiatica**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herb** |
| தமிழ் பெயர் | : | வல்லாரை |
| Hindi Name | : | Brahmi |
| Part Used | : | Whole Plant |
| Uses | : | Alternative, Nervine Tonic, Memory Tonic<br>உடற்றேற்றி, உரமாக்கி, ஞாபகசக்தியை அதிகரிக்கும் |

Propagation Planting Material by : Cuttings, Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 1 Feet X 1 Feet |
| Duration of Crop | : | 5 Months |
| Grown Area | : | All Aquatic area / River bed irrigated lands of Tamil Nadu only. Limited Source of Cultivation. |

**வல்லாரை :** வல்லாரை, துளசியிலை, மிளகு இவைகளை ஓர் அளவாக எடுத்து அரைத்து மிளகளவு உருட்டி இருவேளை கொடுக்க எல்லா சுரங்களும் போகும். இலையை அரைத்து வைத்துக்கட்ட யானைக்கால், விரைவீக்கம், கட்டிகளின் வீக்கம் போகும். இலையுடன் வெந்தயம் சேர்த்து கசாயம் செய்து 1 முதல் 2 சங்கு குழந்தைகளுக்கு புகட்ட சுரம், வயிற்றுக் கோளாறுகள் போகும். இலையின் பொடியை பசுவின் பாலில் கலந்து கொடுத்துவர ஞாபகசக்தி உண்டாகும். தினம் நான்கு இலைகளை சாப்பிட்டுவர அறிவு பெருகும். மாதவிடாயை அதிகப்படுத்தும் (ருதுவுண்டாக்கி) செய்கையுடையதால் வல்லாரை. இலையை பெண் குழந்தைகளுக்கு அதிகமாக கொடுக்க கூடாது. கர்ப்பிணிப் பெண்களும், வலிப்பு நோயுடையவர்களும் கண்டிப்பாக வல்லாரையை மருந்தாகவோ, உணவாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது.



Botanical Name : **Cichorum intybus**

| | | |
|---|---|---|
| Habit | : | **Herbs** |
| தமிழ் பெயர் | : | காசினி |
| Hindi Name | : | Kasni |
| Part Used | : | Seeds, Roots, Flowers |
| Uses | : | Liver Congestion, Demulcent<br>ஈரல் தேற்றி |

Propagation Planting Material by : Seeds

| | | |
|---|---|---|
| Espacement | : | 60 CM X 60 CM |
| Duration of Crop | : | 6 Months |
| Grown Area | : | Distribution is common all over the district of Tamil Nadu - Wild Source |